## சுருக்கம்

சட்டக் கல்வித் துறை – மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிதாக கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சட்ட (சக)த் துறை

அரசாணை (நிலை) எண்.503 — நாள் 16.08.2017
ஹேவிளம்பி – ஆடி – 31
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

1. சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.412/அ1/2017, நாள் 03.03.2017.
2. 05.07.2017 அன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிக்கை.

– – – –

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 110–இன் கீழ், மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வருகின்ற மாணவர்களின் பயன்பாட்டிற்கென புதிய கலையரங்கம் ஒன்று முதல் தளத்திலும் மற்றும் தரைதளத்தில் புதிய நூலகக் கட்டடத்தையும் உள்ளடக்கிய புதிய கட்டடம் 8 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சட்டக்கல்வி இயக்குநர், மற்றவற்றுக்கிடையே, மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கென பொதுப்பணித்துறையிடமிருந்து திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் பெற்று தனது மேலொப்பத்துடன் சமர்ப்பித்து, மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ளுவதற்கென நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சட்டக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளுக்கென ரூ.8,37,04,061/– (ரூபாய் எட்டு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து நான்காயிரத்து அறுபத்து ஒன்று மட்டும்) நிருவாக அனுமதியும், ரூ.4,00,00,000/– (ரூபாய் நான்கு கோடி மட்டும்) 2017–2018 ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணையிடுகிறது. மீதி தொகை வரும் நிதியாண்டில் வழங்கப்படும்.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "4202 – கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 01 – பொதுக் கல்வி – 203 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் – மாநிலச் செலவினங்கள் – JA – கட்டடங்கள் – 16 – பெரும்பணிகள் (து.தொ.கு. 4202 – 01– 203 – JA –1605)"

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வரவு–செலவு–பொது I)த்துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில், நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வரவு–செலவு–பொது I)த்துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017–2018–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு நிதி (வரவு–செலவு–பொது I)த்துறைக்கு தவறாது உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாராக் குறிப்பு எண்.41497/உள்–II/2017, நாள் 16.08.2017–இல் பெற்ற ஒப்புதல் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1180 (ஆயிரத்து நூற்று எண்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. முதல்வர், அரசு சட்டக் கல்லூரி, மதுரை (சட்டக் கல்வி இயக்குநர் வழியாக)
3. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்),பொதுப்பணித்துறை,சேப்பாக்கம், சென்னை–600 005.
4. சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 005 / 600 035.
5. சம்பள கணக்கு அலுவலர், மதுரை.

நகல்

1. முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600009.
3. நிதி(உள்–II/வ.செ.பொ– I/ வ.செ.பொ–II/பொதுப்பணி– I)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
4. மாநில கணக்காயர், சென்னை – 600 018/600 035.
5. இருப்பிடத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ. / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.